**தென்னை ஆராய்ச்சி சபை - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 அபிப்பிராயம்

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தென்னை ஆராய்ச்சி சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர தென்னை ஆராய்ச்சி சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கொடுக்கல் வாங்கல்களின் மாதிரி தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 67,766,279 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. இதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் அக் குறைபாடுகள் தொடர்பாக சீராக்கங்கள் செய்யப்பட்டு திருத்திய நிதிக்கூற்றுக்கள் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க தெரிவு செய்யப்பட்டவைகளுக்கு வெளியே மேலும் கணக்கீட்டுக் குறைபாடுகள் இருக்கும் சாத்தியத்தினை புறக்கணிக்க முடியாதுள்ளது.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் பாதீட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய பாதீடிடப்பட்ட ஐந்தொகையும் பாதீடிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றும் மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 135,500,000 தொகையான திறைசேரி மானியத்தினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டில் சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14,740,770 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 133,300,000 தொகையான திறைசேரி மானியத்தினை கவனத்திற்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 45,847,339 ஆக இருந்தமை நிதிசார் விளைவுகளில் ரூபா 31,106,569 ஆன முன்னேற்றத்தினை சுட்டிக்காட்டுகின்றது.

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2010 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் மானியம், தோட்ட வருமானம் மற்றும் நானாவித வருமானம் ரூபா 17.8 மில்லியன் தொகையால் அதிகரிக்கப்பட்டும் பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 14.7 மில்லியன் தொகையால் குறைவடைந்தமையும் மீளாய்வாண்டின் போதான நிதிவிளைவுகள் அதிகரித்தமைக்குப் பிரதான காரணமாகியிருந்தன.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 2.2.1 ஆராய்ச்சி நடவடிக்கைகள்

----------------------------------------------

#### 2.2.1.1 தாவர இனவிருத்தி (பயிர்களை மேம்படுத்தல்) தொடர்பான செயற்பாடுகள்

------------------------------------------------------------------------------------------------------------------------------

1971 இன் 46 ஆம் இலக்க தென்னை ஆராய்ச்சி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய தென்னை விளைச்சலை அதிகரித்துக்கொள்வதற்கும் நோய் பீடைகளுக்கு தாக்கும் பிடிக்கும் இயலுமையுடன் மேம்படுத்தப்பட்ட பயிரின மாதிரிகளை உற்பத்தி செய்வதும் சபையின் பிரதான செயற்பாடாகும். இச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு நிறுவகத்தில் இன மற்றும் பயிரின விருத்திப் பிரிவு மற்றும் ரிசூ முறை பிரிவின் பெயரில் நேரடியாகப் பொறுப்புக் கூற வேண்டிய 2 பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

அத்தகைய தேசிய தென்னை விளைச்சல் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக உயர் உற்பத்தி விளைச்சலுள்ள மற்றும் பாதகமான சுற்றாடல் நிலைகளுக்கும் பீடை நாசினிகளுக்கு ஈடுகொடுக்கும் பயிரின உற்பத்தியை மேற்கொள்வது தேசிய தேவைப்பாடாக தற்போது நிலவியுள்ளது.

இச் செயற்பாட்டை மேற்கொள்வதற்காக 2001 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மாத்திரம் ரூபா 72.31 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.
இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2001 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ஒரு வர்க்கத்திலான தென்னை மாத்திரமே அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 2004 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட இத் தென்னை வர்க்கம் ‘‘கப்ருவன’’ என இனங்காணப்பட்டுள்ளது.

(ஆ) இத் தென்னை வர்க்கம் அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து கடந்த 6 ஆண்டு காலத்தின் போது ஒரு வருடத்திற்கான 2,500 தென்னம் பிள்ளைகள் 12500 தேங்காய்கள் மாத்திரம் நாட்டப்படுவதற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

(இ) இப் புதிய தேங்காய் வர்க்கம் 2010 ஆம் ஆண்டு வரை மிகவும் குறைவாக உற்பத்தி செய்யப்பட்டிருந்தமையும், இதனை பரப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சி மிகவும் மந்த நிலையில் நிலவியமையும் தேசிய தென்னம் விளைச்சலை அதிகரிப்பதற்கு இதன் மூலம் காண்பிக்கப்படும் பங்களிப்பு மிகவும் குறைவான மட்டத்தில் நிலவியது.

(ஈ) பாதகமான சுற்றாடல் நிலைகளுக்கும் பீடை நாசினிகளுக்கு ஈடுகொடுக்கும் இயலுமையுடன் தென்னை வர்க்கங்களை உற்பத்தி செய்வது தேசிய தேவைப்பாடாக நிலவிய போதிலும் இவ் அறிகுறிகளுடனான தென்னை வர்க்கத்தை உற்பத்தி செய்வதற்கு கடந்த 10 ஆண்டு காலத்தின் போது சபை தவறிவிட்டது.

**2.2.1.2 பயிர் பாதுகாப்பு பிரிவு**

-----------------------------------

தென்னைப் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், பயிர்ச் சேதத்தைக் குறைப்பதற்காக தென்னைப் பயிரீட்டு நோய்த் தடுப்புப் பாதுகாப்பிற்காக அவசியமான தொழிநுட்ப மேம்பாடு நிறுவகத்தின் முதற்செயற்பாடாகும். இந் நோக்கத்தை அடைவதற்காக நிறுவகத்தில் பயிர்ப் பாதுகாப்புப் பிரிவு எனும் பெயரில் வேறான ஓர் பிரிவும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம், தெங்குப் பயிர்களின் நோய்க் கட்டுப்பாடு, வெலிகம இலைச் சோர்வு நோய்க் கட்டுப்பாடு உள்ளடங்கலாக நோய் பீடைகளின் கட்டுப்பாட்டிற்கு கடந்த 10 ஆண்டு காலத்திற்காக மாத்திரம் ரூபா 50 மில்லியன் தொகைக்கு மேல் செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தென்னை மைட்டாவா கட்டுப்பாடு

----------------------------------------------------

ஆராய்ச்சிச் சபையின் 2006 – 2010 செயற்பாட்டு அறிக்கையின் பிரகாரம், வருடாந்தம் தெங்குப் பயிர்ச்செய்கையில் இருந்து 12% - 13% இற்கு இடையில் மைடாவ தாக்கத்திற்கு உட்பட்டிருந்தது.

மைடாவ தாக்கத்தின் மட்டுப்படுத்தலுக்காக வெற்றிகரமானதும் தீர்க்கமானதுமான மட்டுப்படுத்தல் முறை ஒன்றை இனங்காண்பதற்கு முடியாதிருந்தமையால் நோயைக் குறுங்கால கட்டுப்பாட்டிற்காக இனங்காணப்பட்டு 1998 முதல் 2010 ஆம் ஆண்டு வரை 04 இரசாயண முறைகள் பரிந்துரைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வெலிகம இலைச் சோர்வு நோய்க் கட்டுப்பாடு

---

2006 ஆம் ஆண்டின் போது இந் நோய் இனங்காணப்பட்டிருந்ததுடன் நோயை இனங்கண்ட நாள் முதல் 2010 திசெம்பர் 31 வரை நோயைக் கட்டுப்படுத்துவதற்காக ரூபா 18 மில்லியன் தொகைக்கு மேலான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும், 2010 இறுதி வரை இந் நோயை முற்றாகக் கட்டுப்படுத்தி/ குணப்படுத்துவதற்கான முறையை மேற்கொள்வதற்காக சபை தவறியிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டளவில் நோய் பரவுவதனைத் தடுப்பதற்கு நோய் ஏற்பட்ட சகல மரங்களும் வெட்டி அகற்றப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இந் நோயை முற்றாகக் குணப்படுத்துவதற்காக வேறு எந்த நாட்டின் முறையும் இதுவரைக்கும் கண்டுபிடிக்க முடியாதுள்ளதாக தலைவர் அறிவித்திருந்தார்.

**2.3 தோட்ட முகாமைத்துவம்**

---

2010 ஆம் ஆண்டின் போது 04 மரபணு வள நிலையங்களும் 06 ஆராய்ச்சி நிலையங்களும் சபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தன. அவற்றின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 2009/2010 ஆம் ஆண்டுகளுக்குரிய மதிப்பிடப்பட்ட விளைச்சலும் உள்ளபடியான விளைச்சலும் பின்வருமாறு இருந்தன.

| மரபணு வள / ஆராய்ச்சி நிலையம் | மதிப்பிடப்பட்ட விளைச்சல் தேங்காய்கள் | | பிடுங்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை தேங்காய்கள் | | விழுந்த தேங்காய்களின் எண்ணிக்கை | | மொத்த விளைச்சல் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு | | ஆண்டு | | ஆண்டு | | ஆண்டு | |
| | 2010 | 2009 | 2010 | 2009 | 2010 | 2009 | 2010 | 2009 |
| பண்டிருப்பு | 678,728 | 762,414 | 613,381 | 686,073 | 30,605 | 45,898 | 643,986 | 731,971 |
| பள்ளம | 482,000 | 548,512 | 418,695 | 474,311 | 52,331 | 45,611 | 471,026 | 519,922 |
| பொத்துகுளம் | 699,902 | 733,345 | 598,611 | 769,081 | 75,577 | 156,456 | 674,188 | 925,537 |
| அம்பகெலே | 1,345,000 | 1,577,030 | 927,696 | 1,226,928 | 235,304 | 245,840 | 1,163,000 | 1,472,768 |
| ரத்மலாகார | 632,175 | 719,747 | 602,264 | 623,137 | 39,929 | 54,590 | 642,193 | 677,727 |
| வல்பிட்ட | 85,768 | 112,995 | 56,705 | 54,420 | 15,731 | 21,054 | 72,436 | 75,474 |
| மாகந்துர | 400,000 | 505,614 | 462,088 | 518,889 | 41,863 | 44,149 | 503,951 | 563,038 |
| மாதுறுஓயா | 513,017 | 477,030 | 300,496 | 487,338 | 115,613 | 134,565 | 416,109 | 621,903 |
| துன்கன்னாவ | 19,940 | 17,013 | 28,426 | 28,956 | 6,460 | 4,536 | 34,886, | 33,492 |
| மித்தெனிய | - | - | 1,910 | 101 | - | - | 1,910 | 101 |
| மொத்தம் | 4,856,530 | 5,453.,700 | 4,010,272 | 4,869,234 | 613,413 | 752,699 | 4,623,685 | 5,621,933 |

2009 ஆம் ஆண்டின் போது 5.6 மில்லியன் தொகையான மொத்த விளைச்சல் 2010 ஆம் ஆண்டின் போது 4.6 மில்லியன் தேங்காய்கள் வரை 1.0 மில்லியன் தொகையால் அதாவது 17% ஆல் வீழ்ச்சியுற்றிருந்தது. காலநிலையின் சீரற்ற நிலையே இதற்கான காரணமென தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஏக்கருக்கான விளைச்சலும் மரம் ஒன்றில் இருந்து வருடாந்த சராசரி விளைச்சல்

| கற்கை வள / ஆராய்ச்சி நிலையம் | பயிரிடப்பட்ட காணியின் அளவு (ஏக்கர்) | விளைச்சல் தரும் மரங்களின் எண்ணிக்கை | விழுந்த தேங்காய்கள் (தேங்காய்கள்) | மொத்த வருடாந்த விளைச்சல் (தேங்காய்கள்) | ஒரு மரத்தின் வருடாந்த சராசரி விளைச்சல் (தேங்காய்கள்) | ஒரு ஏக்கருக்கான விளைச்சல் | குலையிலுள்ள தேங்காய்கள்( ஒரு மரத்தின் வருடாந்த சராசரி விளைச்சல்)/12 மாதங்களுக்கு | விழுந்த தேங்காய்கள் சதவீதம் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| ----------- | ------ | --------- | -------- | -------- | ------------ | ------- | ------- | -------- |
| பண்டிருப்பு | 207 | 11,490 | 30,605 | 643,986 | 56 | 3,111 | 5 | 5 |
| பள்ளம | 432 | 8,653 | 52,331 | 471,026 | 54 | 1,090 | 5 | 11 |
| பொத்துகுளம் | 170.5 | 9,562 | 75,777 | 674,188 | 70 | 3,954 | 6 | 11 |
| அம்பகெலே | 318.6 | 17,749 | 235,304 | 1,163,000 | 66 | 3,650 | 6 | 20 |
| ரத்மலாகார | 243.5 | 12,526 | 39,929 | 642,193 | 51 | 2,637 | 4 | 6 |
| வல்பிட்ட | 32 | 1,357 | 15,731 | 72,436 | 53 | 2,264 | 4 | 22 |
| மாகந்துரு | 132 | 5,030 | 41,863 | 503,951 | 100 | 3,818 | 8 | 8 |
| மாதுறுஓயா | 147.4 | 6,853 | 115,613 | 416,109 | 61 | 2,823 | 5 | 28 |
| துன்கன்னாவ | 20 | 767 | 6,460 | 34,886 | 45 | 1,744 | 4 | 18 |
| மித்தெனிய | 45.5 | 125 | - | 1,190 | 15 | 42 | 1 | - |
| **மொத்தம்** | 1,748.5 | 74,112 | 613,413 | 4,623,685 | | | | |

(i) மாக்கந்துரு, பொத்துக்குளம், அம்பகெலே மற்றும் மாதுறுஒய போன்ற தோட்டங்கள் தவிர்ந்த ஏனைய தோட்டங்களில் ஓர் மரத்தின் வருடாந்த சராசரி விளைச்சல் 60 காய்களைப் பார்க்கிலும் குறைவாகக் காணப்பட்டன.

(ii) ஏக்கர் ஒன்றிற்காக சராசரி தென்னை விளைச்சல் 4,500 காய்களாக இருக்க வேண்டிய போதிலும் பள்ளம, துன்கன்னாவ போன்ற தோட்டங்களின் விளைச்சல் 2,000 காய்களைப் பார்க்கிலும் குறைவாகவே காணப்பட்டதுடன்

ரத்மலாகார, வல்பிட்ட மற்றும் மாதுறுஓயா தோட்டங்களில் ஏக்கர் ஒன்றிற்கான விளைச்சல் 3,000 காய்களைப் பார்க்கிலும் குறைவாகவே காணப்பட்டது.

(iii) கீழே குறிப்பிடப்பட்ட தோட்டங்களில் விழுந்த தேங்காய்களின் சதவீதம் மிகவும் கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தமையால் விளைச்சலைப் பெற்றுக்கொள்வது குறித்த காலத்தில் நிகழ்ந்திராமை அவதானிக்கப்பட்டது.

| **மரபணு வள/ ஆராய்ச்சி நிலையம்** | **விழுந்த தேங்காய்களின் சதவீதம்** |
|---|---|
| | % |
| மாதுறுஓயா | 28 |
| வல்பிட்ட | 22 |
| அம்பகெலே | 20 |
| துன்கன்னாவ | 18 |

**2.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

(அ) கட்டாய சேவை காலத்தில் சேவையாற்றாமல் வெளிநாட்டு புலமைப் பரிசில் பெற்ற 8 நபர்களிடமிருந்து சபையினால் அறவிடப்படவேண்டிய ரூபா 18 மில்லியன் தொகையிலும் கூடிய தொகை உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்தோ அல்லது பிணைதாரர்களிடமிருந்தோ அறவீடு செய்வதற்கு இந்த அறிக்கைத் திகதிவரை சபை தவறியிருந்தது.

(ஆ) உரக் கொள்வனவும் உரப் பிரயோக திறமையீனமும்

---

சபைக்குரித்தான மரபணு அபிவிருத்தி நிலையங்கள் 04 உம் ஆராய்ச்சி நிலையங்கள் 06 இற்கும் உரித்தான 1772 ஏக்கர் அளவிலான விளைச்சலைப் பெறும் தென்னைமரங்கள் 74,722 இற்கு 2010 ஆம் ஆண்டின் போது இடப்பட வேண்டிய 275,000 கி.கி உரம் கணக்காய்வுத் திகதியாகிய 2010 ஒக்டோபர் 15 ஆம் திகதியிலும் கொள்வனவு செய்யப்படுவதற்கு தவறியிருந்தது.

இது தொடர்பான மேலதிக ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விலைக் கோரல் சந்தர்ப்பம் முதல் விலை கையளிக்கப்படும் சந்தர்ப்பம் வரை கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 4.2.3 இன் பிரகாரம் (ரூபா 05 மில்லியனிற்கும் 25 மில்லியன் தொகைக்கும் இடையிலான கொள்வனவிற்காக) இடமளிக்கப்பட்ட வழமையான காலம் 10 கிழமைகளான போதிலும் சபை இதற்காக 25 கிழமைகள் அளவிலான காலத்தை எடுத்திருந்தது.

திணைக்களக் கொள்வனவுக் குழு நியமிக்கப்படுவதில் ஏற்பட்ட தாமதமே இதற்குக் காரணமாக தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) சபை 2008 ஆம் ஆண்டின் உரக் கொள்வனவில் தாமதம் ஏற்பட்டமையால் அவ் ஆண்டின் போது உரத்தை இட முடியாதிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் போதும் அக் காரணத்தினாலேயே முறையாக மேற்கொள்ளப்பட முடியாதிருந்தது.

(iii) எவ்வாறெனினும், சபைக் களஞ்சியங்களில் 2010 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு 2010 ஆம் ஆண்டிற்கு அவசியமான உர அளவிற்கு மேலாக ரூபா 13 மில்லியன் பெறுமதியான 334,747 கி.கி உரம் காணப்பட்டது.

2010 ஆம் ஆண்டின் போது உரப் பிரயோகம் சம்பந்தமான பயன்படுத்திய செயலாற்றல் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| மரபணு இனவள நிலையம்/ ஆராய்ச்சி நிலையம் | உள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை | | 2010.12.31 இல் உள்ளவாறு உரம் இடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை | | உரம் இடப்படும் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|
| | காய்க்கும் மரங்கள் | முளை மரங்கள் | காய்க்கும் மரங்கள் | முளை மரங்கள் | காய்க்கும் மரங்கள் | முளை மரங்கள் |
| பண்டிருப்பு | 11,500 | 1,943 | 10,560 | 1,943 | 91 | 100 |
| பள்ளம | 9,117 | 5,752 | 3,021 | 5,697 | 63 | 99 |
| பொத்துகுளம் | 10,393 | 1,035 | 7,517 | - | 72 | - |
| அம்பகெலே | 17,148 | 2,064 | 8,243 | 1,505 | 48 | 73 |
| ரத்மலாகார | 12,387 | 590 | 5,986 | 302 | 48 | 51 |
| வல்பிட்ட | 1,357 | 480 | 600 | 480 | 44 | 100 |
| மாகந்துர | 5,200 | - | 3,563 | - | 69 | - |
| மாதுறுஓயா | 6,853 | 946 | 6,853 | 347 | 100 | 37 |
| துன்கன்னாவ | 767 | 527 | - | 460 | - | 87 |
| மித்தெனிய | - | 2,926 | - | 2,926 | - | 100 |
| மொத்தம் | 74,722 | 16,263 | 46,343 | 13,660 | 62 | 84 |

(iv) சபையினால் பேணப்படும் 74722 மரங்களில் 46343 மரங்களுக்கு மாத்திரம் பசளையிடப்பட்டிருந்ததுடன் இது 62 சதவீதமாக ஆகக் காணப்பட்டது.

(v) ஓட்டுமொத்தமாக 62% இற்கு உரமிடப்பட்ட போதிலும் அம்பகெலே, ரத்மலாகார, வல்பிட்ட தோட்டங்களில் உரமிடும் சதவீதம் முறையே 48% ஆகவும் 44% ஆகவும் இருந்தது.

(vi) துன்கன்னாவ ஆராய்ச்சி நிலையத்தில் காய்க்கும் 767 தென்னை மரங்களில் எந்த மரத்திற்கும் 2010 ஆம் ஆண்டின் போது உரம் இடப்பட்டிருக்கவில்லை.

## 2.5 கூட்டுத்திட்டம்

2008 – 2012 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டுத்திட்டம் 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. 12 இன் பிரகாரம் செயற்படு முறையில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. 2011 சனவரி 21 ஆம் திகதி 2011 – 2012 இற்கான செயற்பாட்டுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது 2011 – 2012 இற்கு உரித்தான வருமானச் செலவினம் தொடர்பான எதிர்வுகூறலை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பான 121 பதவிகளில் மீளாய்வாண்டின் போதும் வெற்றிடம் நிலவியது.

## 2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது உள்ளபடியான வருமானச் செலவினங்கள் பாதீட்டில் காணப்பட்ட வருமானச் செலவினத் தலைப்புகளுக்கு இணங்கும் வகையில் வகைப்படுத்தப்பட்டிராமையால் வருமானச் செலவினங்கள் தொடர்பான ஓர் விளக்கத்தை மேற்கொள்ள முடியாதிருந்தது. இது தொடர்பாக கடந்த கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் சபைத் தலைவரின் கவனத்திற்குக் காலத்துக்குக் காலம் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஆராய்ச்சி

(இ) தோட்ட முகாமைத்துவம்

(ஈ) மனிதவள முகாமைத்துவம்

(உ) வெளிநாட்டுப் புலமைப் பரிசில் பெற்றவர்களின் சேவை உடன்படிக்கைக் காலம்

(ஊ) முதலீடுகள்

(எ) உரக் கொள்வனவும் பயன்பாடும்